



பொதுப்பணிகள், நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் எ.வ. வேலு நேற்று (18.2.2025) திருநெல்வேலி மாவட்டம், குலவணிகர் புரம் கிராமத்தில் ரூ.33.02 கோடி செலவில் கட்டப்பட்டு வரும் பொருநை அகழ்வைப்பக கட்டட கட்டுமானப் பணிகளை ஆய்வு மேற்கொண்டார்.

## 9 பேருக்கு - வாழும் கைவினைப் பொக்கிஷம் விருது-

# 9 பேருக்கு பூம்புகார் - மாநில விருதுகள் என - 18 சிறந்த கைவினைஞர்களுக்கு விருதுகள்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் வழங்கிச் சிறப்பிப்பு!

சென்னை, பிப்.19-

வாழும் கைவினைப் பொக்கிஷம் விருதுகளை 9 சிறந்த கைவினைஞர்களுக்கும், பூம்புகார் மாநில விருதுகளை 9 சிறந்த கைவினைஞர்களுக்கும் என 18 பேருக்கு முதலமைச்சர்

மு.க.ஸ்டாலின் அவர்கள் வழங்கி சிறப்பித்தார்.

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (18.2.2025) தலைமைச் செயலகத்தில், தமிழ்நாடு கைத்திறத் தொழில்கள் வளர்ச்சிக் கழகத்தின் சார்பில், கைவினைத் தொழிலுக்காகவே தங்கள் வாழ்க்கையை அர்ப்பணித்துக் கொண்ட 65 வயதுக்கும் மேற்பட்ட

9 சிறந்த கைவினைஞர்களுக்கு வாழும் கைவினைப் பொக்கிஷம் விருதுகளையும், கைத்திறத் தொழிலின் பங்களிப்பு, அபிவிருத்தி மற்றும் படைப்புகள் ஆகியவற்றில் சிறந்த 9 கைவினைஞர்களுக்கு பூம்புகார் மாநில விருதுகளையும் வழங்கி சிறப்பித்தார்.

**வாழும் கைவினைப் பொக்கிஷம் விருது!**

கைவினைத் தொழிலுக்காகவே தங்கள் வாழ்க்கையை அர்ப்பணித்துக் கொண்ட 65 வயதுக்கு மேற்பட்ட சிறந்த கைவினைஞர்களுக்கு தமிழ்நாடு அரசால் ”வாழும் கைவினைப் பொக்கிஷம்” எனும் விருது வழங்கப்படுகிறது. கைவினைஞர்களை பாராட்டுவதற்கும், அவர்களின் திறனை ஊக்குவிப்பதற்கும் தமிழ்நாடு கைத்திறத் தொழில்கள் வளர்ச்சிக் கழகத்தால் இவ்விருது ஆண்டுதோறும் 15 இலட்சம் ரூபாய் மதிப்பில் வழங்கப்பட்டு வருகிறது. வாழும் கைவினைப் பொக்கிஷம் விருதிற்காக ஒவ்வொரு பிரிவிற்கும் ஒருவர் வீதம் தலா 8 கிராம் தங்கப்பதக்கம், தாமிரப்பத்திரம், சான்றிதழுடன் ஒரு இலட்சம் ரூபாய்க்கான காசோலை வழங்கப்படுகிறது.

அதன்படி, 2023-24ஆம் ஆண்டிற்கான ”வாழும் கைவினைப் பொக்கிஷம்” விருதுகளை - தஞ்சாவூர் மாவட்டத்தைச் சேர்ந்த

சி.முருகேசன் (தஞ்சாவூர் கலைத்தட்டு), ஈரோடு மாவட்டத்தைச் சேர்ந்த சொ. ராஜகோபால் (பஞ்சலோக சிற்பம்), தஞ்சாவூர் மாவட்டத்தைச் சேர்ந்த ரெ. ராதா (நெட்டி வேலை), விழுப்புரம் மாவட்டத்தைச் சேர்ந்த தி சி.பலராமன் (சுடு களிமண் சிற்பம்), கன்னியாகுமரி மாவட்டத்தைச் சேர்ந்த சொ. நாகமுத்து ஆச்சாரி (மரச்சிற்பம்), மதுரை மாவட்டத்தைச் சேர்ந்த ச. கிருஷ்ணமூர்த்தி (தகட்டு வேலை), திருவள்ளூர் மாவட்டத்தைச் சேர்ந்த திருமதி. ஹம்சா பீவி (பனை ஓலை பொருட்கள்), மதுரை மாவட்டத்தைச் சேர்ந்த பெ. கிருஷ்ணன் (பஞ்சலோக சிலைகள்) மற்றும் கன்னியாகுமரி மாவட்டத்தைச் சேர்ந்த திருமதி. செ. லில்லி மேரி (மூங்கில் பாயில் ஓவியம்) ஆகிய 9 விருதாளர்களுக்கு முதலமைச்சர் அவர்கள், வாழும் கைவினைப் பொக்கிஷம் விருதிற்கான தலா ஒரு இலட்சம் ரூபாய்க்கான காசோலை, 8 கிராம் தங்கப் பதக்கம், தாமிரப் பத்திரம் மற்றும் தகுதிச்சான்றிதழ் வழங்கி சிறப்பித்தார்.

**பூம்புகார் மாநில விருது!**

“பூம்புகார் மாநில விருது” தமிழ்நாட்டின் சிறந்த கைவினைஞர்களின் கைத்திறத் தொழிலின் பங்களிப்பு, அபிவிருத்தி மற்றும் படைப்புகளை கருத்தில் கொண்டு வழங்கப்படுகிறது. அதிகபட்சமாக பத்து கைவினைஞர்களுக்கு ஆண்டுதோறும் 12 இலட்சம் ரூபாய் மதிப்பில் இவ்விருதுகள் வழங்கப்பட்டு வருகிறது. இவ்விருதுகள் ரூ.50,000/ பரிசுத் தொகை, 4 கிராம் தங்கப் பதக்கம், தாமிரப்பத்திரம் மற்றும் தகுதிச்சான்றிதழும் கொண்டதாகும்.

அதன்படி, 202324ஆம் ஆண்டிற்கான பூம்புகார் மாநில விருதுகளை - சென்னை மாவட்டத்தைச் சேர்ந்த சீ.வே. ராமகிருஷ்ணன் (உலோக சிற்பம்) மற்றும் திருமதி. கோ. குணசுந்தரி (காகிதக் கூழ் பொம்மைகள்),

சி. காத்தான் (தஞ்சாவூர் ஓவியம்) மற்றும் ரெ. மெய்யர் (சுடு களிமண் சிற்பம்), செங்கல்பட்டு மாவட்டத்தைச் சேர்ந்த கு. ரமேஷ் (மரச்சிற்பம்) மற்றும் ஹ. ஸ்ரீதர் (தேங்காய் ஓடு பொருட்கள்), திருவண்ணாமலை மாவட்டத்தைச் சேர்ந்த கா. கார்த்திகேயன் (பனை ஓலை பொருட்கள்), கடலூர் மாவட்டத்தைச் சேர்ந்த பா. கல்யாணகுமார் (காகித கூழ் பொம்மைகள்), தஞ்சாவூர் மாவட்டத்தைச் சேர்ந்த கி. சந்திரசேகரன் (கண்ணாடி கலைப்பொருட்கள்) ஆகிய 9 விருதாளர்களுக்கு முதலமைச்சர் அவர்கள் பூம்புகார் மாநில விருதிற்கான தலா 50 ஆயிரம் ரூபாய்க்கான காசோலை, 4 கிராம் தங்கப் பதக்கம், தாமிரப் பத்திரம் மற்றும் சான்றிதழ்களை வழங்கி சிறப்பித்தார்.

இந்த நிகழ்ச்சியில், குறு, சிறு மற்றும் நடுத்தரத்

தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா. மோ. அன்பரசன், தலைமைச் செயலாளர் நா. முருகானந்தம், கைத்தறி, கைத்திறன், துணி நூல் மற்றும் கதர்த்துறை செயலாளர் திருமதி. வே. அமுதவல்லி, தமிழ்நாடு கைத்திறத் தொழில்கள் வளர்ச்சிக் கழகத்தின் மேலாண் இயக்குநர் திருமதி. சு. அமிர்த ஜோதி, ஆகியோர் கலந்து கொண்டனர்.


**பெருநகர சென்னை மாநகராட்சி**

**பெருநகர சென்னை மாநகராட்சி மாமன்ற கூட்ட நிகழ்ச்சி பற்றிய அறிவிப்பு**

(தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் விதிகள் 2023 அத்தியாயம் - 4, பகுதி - 1 விதி எண்.156 (1)ன் கீழ்)

**2025- ஆம் ஆண்டு பிப்ரவரி திங்கள் 27ஆம் நாள் வியாழக்கிழமை காலை 10.00 மணிக்கு, மாநகராட்சி மன்ற கூடத்தில் மாமன்ற சாதாரண கூட்டம் நடைபெற உள்ளது. மாமன்ற உறுப்பினர்கள் அனைவரும் தவறாமல் இக்கூட்டத்தில் கலந்து கொள்ள வேண்டுமாய் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.**

**மேயர்**

செ.ம.தொ.இ / 174 / வரைகலை / 2025

**பெருநகர சென்னை மாநகராட்சி**
**வடக்கு வட்டார அலுவலகம்**

வ.வ.அ.இ.பொ.து.ந.க.எண்.பி4/472B/2024

**குறுகிய கால மறு மின்னணு ஒப்பம்**

கீழ்கண்ட பணிக்கு மேற்பார்வை பொறியாளர் (வடக்கு) அவர்களால் குறுகிய கால மறு மின்னணு ஒப்பம் கோரப்படுகிறது (ஒப்ப விதிகளின்படி)

| பணியின் விவரம் | பணியின் மதிப்பு | முன் வைப்பு தொகை |
|---|---|---|
| பெருநகர சென்னை மாநகராட்சியின் மண்டலம் 5 லாரி நிலையத்தில் உள்ள 387 எண்ணிக்கையிலான பேட்டரி மூலம் இயக்கப்படும் வாகனங்களை வருடாந்திர பராமரிப்புக்காக ஒப்பந்த அடிப்படையில் 90 நாட்களுக்கு பணியமர்த்துதல். | ரூ.45,27,900/- | ரூ.45,300/- |

ஒப்ப படிவம் சமர்ப்பிக்க கடைசி நாள் மற்றும் நேரம் : 27.02.2025 மாலை 03.00 மணி
ஒப்ப திறப்பு நாள் மற்றும் நேரம் : 28.02.2025 மாலை 03.15 மணி
மேலும் விபரங்களுக்கு : http://tntenders.gov.in

செ.ம.தொ.இ / 636 / ஒப்பந்தப்புள்ளி / 2025

**மேற்பார்வை பொறியாளர் (வடக்கு)**






கள்ளக்குறிச்சி தெற்கு மாவட்டக் கழகச் செயலாளரும், ரிஷிவந்தியம் தொகுதி சட்டமன்ற உறுப்பினருமான வசந்தம் க.கார்த்திகேயன், நேற்று முன்தினம் தியாகதுருகம் வடக்கு ஒன்றிய கழக செயலாளரும், ஒன்றியக்குழு துணை பெருந்தலைவருமான, இரா.நெடுஞ்செழியன் அவர்களின் தந்தையும், ஓய்வு பெற்ற தலைமை ஆசிரியர், முன்னாள் ஒன்றியக்குழு உறுப்பினருமான மறைந்த இரா.இராசு அவர்களின் திருவுருவப்படத் திறப்பு விழாவில் கலந்து கொண்டு, ஐயாவின் திருவுருவப் படத்தினை திறந்து வைத்து, மலர் தூவி, மரியாதை செய்து, புகழ் அஞ்சலி செலுத்தி உரையாற்றினார், இந்த நிகழ்வில், ஒன்றிய, நகர, பேரூர் கழக செயலாளர்கள்,மாவட்ட, ஒன்றிய, நகர,பேரூர் பெருந்தலைவர்கள், துணைத் தலைவர்கள், மாநில, மாவட்ட ஒன்றிய,நகர, பேரூர் கழக நிர்வாகிகள், சார்பு அணிகளின் நிர்வாகிகள், கழகத் தோழர்கள் என அனைவரும் பெருந்திரளாக கலந்து கொண்டு புகழ் அஞ்சலி செலுத்தினார்கள்.

## கழகத் தலைவர் - தமிழ்நாடு முதலமைச்சர் பிறந்தநாள் விழா!

# காஞ்சிபுரம் தெற்கு மாவட்டத்தில் தொடர் 72 பொதுக்கூட்டங்கள்!

## மாவட்டச் செயலாளர் க.சுந்தர் எம்.எல்.ஏ. அறிவிப்பு!



கழகத் தலைவர் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் பிறந்தநாள் மார்ச்.1 அன்று காஞ்சி தெற்கு மாவட்ட முழுவதும் வார்டு, கிளைகள் தோறும் கழக கொடி ஏற்றி இனிப்பு மற்றும் அறுசுவை உணவு வழங்குதல் - அன்று காஞ்சிபுரம் மதுராந்தகம் அரசு பொது மருத்துவமனையில் பிறக்கும் குழந்தைகளுக்கு தங்க மோதிரம் அணிவித்தல் அதனை தொடர்ந்து தொடர் 72 பொதுக்கூட்டங்கள் நலத்திட்டங்கள், மருத்துவ முகாம், விளையாட்டு போட்டிகள், மரக்கன்று நடுதல் நடைபெறவுள்ளது. பொதுக்கூட்டங்கள் விவரம் கீழ்கண்டவாறு நடைபெறுகிறது.

| தேதி | தலைமை கழக பேச்சாளர்கள் | மாநகரம் / நகரம் / ஒன்றியம்/ பகுதி / பேரூர் | கூட்டம் ஏற்பாடு |
|---|---|---|---|
| 22.02.2025 | கம்பம் செல்வேந்திரன் | கம்பம் செல்வேந்திரன் | சி.கே.வி.தமிழ்செல்வன் மாநகர செயலாளர், எஸ்.சந்துரு, பகுதி செயலாளர் |
| 25.02.2025 | சேலம் சுஜாதா | சித்தாமூர் (கி) ஒன்றியம் | ஏ.சிற்றரசு, ஒன்றிய செயலாளர் |
| 25.02.2025 | ஈரோடு இறைவன் | இடைக்கழி நாடு போரூராட்சி | டி.மோகன்தாஸ், பேரூர் செயலாளர் |
| 25.02.2025 | கவிஞர் நன்மாறன் | இலத்தூர் (வ) ஒன்றியம் | கே.எஸ்.ராமசந்திரன் ஒன்றிய செயலாளர் |
| 25.02.2025 | கவிஞர் நன்மாறன் | இலத்தூர் (தெ) ஒன்றியம் | எம்.எஸ்.பாபு, ஒன்றிய செயலாளர் |
| 26.02.2025 | சைதை சாதிக் | சித்தாமூர் (மே) ஒன்றியம் | வி.ஏழுமலை, ஒன்றிய செயலாளர் |
| 26.02.2025 | சைதை சாதிக் | மதுராந்தகம் (தெ) ஒன்றியம் | பொன்சிவகுமார், ஒன்றிய செயலாளர் மற்றும் (ம) ஒன்றிய இளைஞர்அணி |
| 27.02.2025 | கந்தி கரிகாலன் | சாலவாக்கம் ஒன்றியம் | டி.குமார், ஒன்றிய செயலாளர் |
| 27.02.2025 | கந்தி கரிகாலன் | வாலாஜாபாத் (தெ) ஒன்றியம் | பி.சேகர், ஒன்றிய செயலாளர் (ம) ஒன்றிய இளைஞர் அணி |
| 27.02.2025 | அத்திபட்டு சாம்ராஜ் | காஞ்சிபுரம் (தெ) ஒன்றியம் | க.குமணன், ஒன்றிய செயலாளர் |
| 27.02.2025 | அத்திபட்டு சாம்ராஜ் | காஞ்சிபுரம் (வ) ஒன்றியம் | பி.எம்.குமார், ஒன்றிய செயலாளர் |
| 28.02.2025 | கரூர் முரளி | மதுராந்தகம் நகரம் | கே.குமார், நகர செயலாளர், நகர இளைஞர் அணி |
| 28.02.2025 | கரூர் முரளி | அச்சரப்பாக்கம் பேரூர் | வி.எழிலரசன், பேரூர் செயலாளர் (ம) பேரூர் இளைஞர் அணி |
| 28.02.2025 | எழும்பூர் கோபி நாத் யாசர் அரபாத் | திருக்கழுகுன்றம் (தெ) ஒன்றியம் | இ.சரவணன், ஒன்றிய செயலாளர் (ம) ஒன்றிய இளைஞர் அணி |
| 28.02.2025 | எழும்பூர் கோபி நாத் யாசர் அரபாத் | இலத்தூர் (வ) ஒன்றியம் | கே.எஸ்.இராமசந்திரன் ஒன்றிய செயலாளர் (ம) ஒன்றிய இளைஞர் அணி |
| 02.03.2025 | நெல்குப்பம் புகழேந்தி | காஞ்சிபுரம் மாநகராட்சி பகுதி–4 | சி.வே.வி தமிழ்ச்செல்வன், மாநகராட்சி செயலாளர், சு.வெங்கடேசன். பழுமு செயலாளர் |
| 06.03.2025 | த.ந,பாரதி சூர்யா வெற்றிக்கொண்டன் | காஞ்சிபுரம் மாநகராட்சி பகுதி–4 | சி.வே.வி தமிழ்ச்செல்வன், மாநகராட்சி செயலாளர், எஸ்.சந்துரு பகுதி செயலாளர் |
| 07.03.2025 | சிவாஜி கிரிஷ்ணமூர்த்தி | வாலாஜாபாத் பேரூர் | எண்.பாண்டியன் பேரூர் செயலாளர் |
| 07.03.2025 | சிவாஜி கிரிஷ்ணமூர்த்தி | காஞ்சிபுரம் மாநகராட்சி பகுதி 3 | சி.வே.வி தமிழ்ச்செல்வன், மாநகராட்சி செயலாளர், அ.தசரதன் பகுதி செயலாளர், |
| 08.03.2025 | சிவாஜி கிரிஷ்ணமூர்த்தி | காஞ்சிபுரம் (தெ) ஒன்றியம் | க.குமரன், ஒன்றிய செயலாளர், |
| 08.03.2025 | சிவாஜி கிரிஷ்ணமூர்த்தி | உத்திரமேரூர் ஒன்றியம் | கெ.ஞானசேகரன், ஒன்றிய செயலாளர் |
| 08.03.2025 | பேராசிரியர் கான்ஸ்டன்ட் ரவீந்திரன் | காஞ்சிபுரம் மாநகராட்சி | சி.வே.வி தமிழ்ச்செல்வன், மாநகராட்சி செயலாளர், கே.திலகர் பகுதி செயலாளர் |
| 09.03.2025 | கடலூர் புகழேந்தி | காஞ்சிபுரம் மாநகராட்சி | சி.வே.வி தமிழ்ச்செல்வன், மாநகராட்சி செயலாளர், அ.யுவராஜ், மாவட்ட இளைஞர் அணி |
| 10.03.2025 | காசிமுத்து மாணிக்கம் | காஞ்சிபுரம் மாநகராட்சி | சி.வே.வி தமிழ்ச்செல்வன், மாநகராட்சி செயலாளர், வி.எஸ்.ராமகிருஷ்ணன், மாநில வர்த்தக அணி |
| 14.03.2025 | திண்டுக்கல் ஐ. யோணி | காஞ்சிபுரம் மாநகராட்சி பகுதி 3 | சி.வே.வி தமிழ்ச்செல்வன், மாநகராட்சி செயலாளர், அ.தசதரன் பகுதி செயலாளர் |
| 15.02.2025 | பொன்னேரி சிவா | சித்தாமூர் (கி) ஒன்றியம் | ஏ.சிற்றரசு, ஒன்றிய செயலாளர் (ம) ஒன்றிய இளைஞர் அணி |
| 15.03.2025 | பொன்னேரி சிவா | சித்தாமூர் (மே) ஒன்றியம் | வி.ஏழுமலை, ஒன்றிய செயலாளர் (ம) ஒன்றிய இளைஞர்அணி |
| 15.03.2025 | ஆலந்தூர் மலர்மன்னன் | இலத்தூர் (தெ) ஒன்றியம் | எம்.எஸ்.பாவு, ஒன்றிய செயலாளர், (ம) ஒன்றிய இளைஞர் அணி |
| 15.03.2025 | ஆலந்தூர் மலர்மன்னன் | மதுராந்தகம் (தெ) ஒன்றியம் | பொன் சிவகுமார், ஒன்றிய செயலாளர் (ம) ஒன்றிய இளைஞர் அணி |
| 16.03.2025 | தக்கோலம் தேவபாலன் | அச்சரப்பாக்கம் (வ) ஒன்றியம் | ஜி.தம்பு, ஒன்றிய செயலாளர் (ம) ஒன்றிய இளைஞர் அணி |
| 16.03.2025 | தக்கோலம் தேவபாலன் | அச்சரப்பாக்கம் (தெ) ஒன்றியம் | கே.கண்ணன், ஒன்றிய செயலாளர் |
| 16.03.2025 | எட்டடையபுரம் தமிழ்பிரியன் | அச்சரப்பாக்கம் பேரூர் | வி.எழிலரசன், பேரூர் செயலாளர் |
| 16.03.2025 | எட்டடையபுரம் தமிழ்பிரியன் | மதுராந்தகம் நகரம் | கே.குமார், நகர செயலாளர் (ம) நகர இளைஞர் அணி |
| 17.03.2025 | ஆரணி மாலா | வாலாஜாபாத் (வட) ஒன்றியம் | பி.எம்.பாபு, ஒன்றிய செயலாளர் |
| 17.03.2025 | ஆரணி மாலா | வாலாஜாபாத் (தெ) ஒன்றியம் | பி.சேகர், ஒன்றிய செயலாளர், திருமதி.எழிலரசி சுந்தரமூர்த்தி பொ.பு.உறுப்பினர் |
| 17.03.2025 | ஈரோடு சத்யவதி | சித்தாமூர் (மே) ஒன்றியம் | வி.எழுமலை, ஒன்றிய செயலாளர் (ம) ஒன்றிய இளைஞர் அணி |
| 17.03.2025 | ஈரோடு சத்யவதி | அச்சரப்பாக்கம் (தெ) ஒன்றியம் | கே.கண்ணன், ஒன்றிய செயலாளர் |
| 18.03.2025 | ஆரூர் மணிவண்ணன் | காஞ்சிபுரம் (வ) ஒன்றியம் | எம்.எஸ்.சுமார், தலைமை செயற்குழு உறுப்பினர், பி.எம்.குமார், ஒன்றிய செயலாளர் |
| 18.03.2025 | ஆரூர் மணிவண்ணன் | காஞ்சிபுரம் மாநகராட்சி | ப.சுகுமார், மாநகர இளைஞர் அணி, சஞ்சய் குமார் பகுதி இளைஞர் அணி |
| 18.03.2025 | திருப்பூர் ரஜினி செந்தில் | காஞ்சிபுரம் மாநகராட்சி | சி.கே.வி.தமிழ்ச்செல்வன் மாநகர செயலாளர், டி.அன்பழகன் மாநில நெசவாளர்அணி |
| 18.03.2025 | திருப்பூர் ரஜினி செந்தில் | காஞ்சிபுரம் மாநகராட்சி | சி.கே.சி. தமிழ்ச்செல்வன், மாநகர செயலாளர், ப.சுகுமார், மாநகர இளைஞர் அணி |
| 19.03.2025 | முரசொ மூர்த்தி | வாலாஜாபாத் (வ) ஒன்றியம் | பி.எம்.பாபு, ஒன்றிய செயலாளர் |
| 19.03.2025 | முரசொ மூர்த்தி | காஞ்சிபுரம் (வ) ஒன்றியம் | பி.எம்.குமார், ஒன்றிய செயலாளர் |
| 18.03.2025 | திருப்பூர் மனோகர் பாபு | காஞ்சிபுரம் (வ) ஒன்றியம் | பி.எம்.குமார், ஒன்றிய செயலாளர் |
| 18.03.2025 | திருப்பூர் மனோகர் பாபு | வாலாஜாபாத் (வ) ஒன்றியம் | பி.எம்.பாபு, ஒன்றிய செயலாளர் |
| 20.03.2025 | குடியாதம் பெரிய கோடீஸ்வரன் | மதுராந்தகம் (வ) ஒன்றியம் | பி.எச்.சத்தியசாய், ஒன்றிய செயலாளர் |
| 20.03.2025 | குடியாதம் பெரிய கோடீஸ்வரன் | அச்சரப்பாக்கம் (வ) ஒன்றியம் | ஜி.தம்பு, ஒன்றிய செயலாளர் |
| 20.03.2025 | வண்ணை புகாரி | சாலவாக்கம் ஒன்றியம் | டி.குமார், ஒன்றிய செயலாளர் |
| 20.03.2025 | வண்ணை புகாரி | வாலாஜாபாத் (தெ) ஒன்றியம் | பி.சேகர், ஒன்றிய செயலாளர் |
| 1.03.2025 | ஈரோடு இளைய கோபால் | மதுராந்தகம் (வ) ஒன்றியம் | பி.எச்.சத்தியசாய், ஒன்றிய செயலாளர் |
| 21.03.2025 | ஈரோடு இளைய கோபால் | மதுராந்தகம் (தெ) ஒன்றியம் | பொன்சிவகுமார், ஒன்றிய செயலாளர் |
| 21.03.2025 | பவானி கண்ணன் | இலத்தூர் (வ) ஒன்றியம் | கே.எஸ்.இராமசந்திரன், ஒன்றிய செயலாளர் |
| 21.03.2025 | பவானி கண்ணன் | இலத்தூர் (தெ) ஒன்றியம் | எம்.எஸ்.பாபு, ஒன்றிய செயலாளர் |
| 22.03.2025 | நாத்திகம் நாகராஜன் | திருக்கழுகுன்றம் (தெ) | இ.சரவணன், ஒன்றிய செயலாளர் |
| 22.03.2025 | நாத்திகம் நாகராஜன் | இலத்தூர் தெற்கு ஒன்றியம் | எம்.எஸ்.பாபு, ஒன்றிய செயலாளர் (ம) ஒன்றிய இளைஞர் அணி |
| 22.03.2025 | போடி காமராஜ் | சித்தாமூர் கிழக்கு ஒன்றியம் | ஏ.சிற்றரசு, ஒன்றிய செயலாளர் |
| 2.03.2025 | போடி காமராஜ் | இடைக்கழி நாடு பேரூராட்சி | டி.மோகன்தாஸ், பேரூர் செயலாளர், செல்வி.சம்யுத்தா ஐயனார் பேரூராட்சி மன்றதலைவர் |
| 24.03.2025 | விஷார் தமிழரசன் | அச்சரப்பாக்கம் (வ) ஒன்றியம் | ஜி.தம்பு, ஒன்றிய செயலாளர் |
| 24.03.2025 | விஷார் தமிழரசன் | கருங்குழி பேரூர் | அ.சுந்தரமூர்த்தி, பேரூர் செயலாளர் |
| 24.03.2025 | கலைச்செல்வி ஜகந்நாதன் சிலம்பரசன் | வாலாஜாபாத் (தெ) ஒன்றியம் | பி.சேகர், ஒன்றிய செயலாளர் |
| 24.03.2025 | கலைச்செல்வி ஜகந்நாதன் சிலம்பரசன் | வாலாஜாபாத் (வ) ஒன்றியம் | பி.எம்.பாபு, ஒன்றிய செயலாளர் (ம) ஒன்றிய இளைஞர்அணி |
| 25.03.2025 | அணவயல் கணேசன் | உத்திரமேரூர் ஒன்றியம் | செ.ஞானசேகரன், ஒன்றிய செயலாளர் |
| 25.03.2025 | அணவயல் கணேசன் | சாலவாக்கம் ஒன்றியம் | டி.குமார், ஒன்றிய செயலாளர் |
| 25.03.2025 | பசும்பொன் ரவிசந்திரன் | சித்தாமூர் (கி) ஒன்றியம் | ஏ.சிற்றரசு, ஒன்றிய செயலாளர், புருஷோத்தம்மன் மாவட்ட ஆதி திராவிட நலக்குழு |
| 25.03.2025 | பசும்பொன் ரவிசந்திரன் | அச்சரப்பாக்கம் (வ) ஒன்றியம் | ஜி.தம்பு, ஒன்றிய செயலாளர் (ம) ஒன்றிய மாணவர் அணி |
| 26.03.2025 | குமரி பிரபாகரன் | உத்திரமேரூர் ஒன்றியம் | செ.ஞானசேகரன், ஒன்றிய செயலாளர் |
| 26.03.2025 | குமரி பிரபாகரன் | காஞ்சிபுரம் மாநகராட்சி | ப.சுகுமார், மாநகர இளைஞர் அணி, வேல்முருகன் பகுதி இளைஞர் அணி |
| 27.03.2025 | மதிவாணன் | காஞ்சிபுரம் மாநகராட்சி பகுதி 1 | சி.கே.வி.தமிழ்ச்செல்வன், மாநகர செயலாளர், கே.திலகர், பகுதி செயலாளர் |
| 27.03.2025 | ஆடுதுறை உத்ரபதி | காஞ்சிபுரம் மாநகராட்சி | சி.கே.வி.தமிழ்ச்செல்வன், மாநகர செயலாளர், வ.வெங்கட்ராமன், மாவட்ட சுற்றுச்சூழல்அணி |
| 28.03.2025 | தூத்துக்குடி சரத்பாலா | மதுராந்தகம் (வ) ஒன்றியம் | பி.எச்.சத்தியசாய், ஒன்றிய செயலாளர்,(ம) ஒன்றிய இளைஞர் அணி |
| 28.03.2025 | தூத்துக்குடி சாத்பாலா | கருங்குழி பேரூர் | அ.சுந்தரமூர்த்தி, பேரூர் செயலாளர் |
| 30.03.2025 | தாயகம் கவி | காஞ்சிபுரம் மாநகராட்சி பகுதி–4 | சி.கே.வி.தமிழ்ச்செல்வன், மாநகராட்சி செயலாளர், சு.வெங்கடேசன் பகுதி செயலாளர் |

எனவே சம்பந்தப்பட்ட மாநகர, நகர, ஒன்றியம், பகுதி பேரூர் செயலாளர்கள் கூட்ட அழைப்பிதழை முறையாக அச்சிட்டு அந்த அந்தப் பகுதிக்கு உட்பட்ட மாவட்ட கழக நிர்வாகிகள், சட்டமன்ற உறுப்பினர், கழக அணிகளின் நிறுவாகிகள் உள்ளாட்சி பிரதிநிதிகள் கழக நிர்வாகிகள் அனைவருக்கும் அழைப்பிதழை தந்து பெருந்திரளாக பங்கேற்குமாறும் கூட்ட மேடையிலே நலத்திட்டங்கள் வழங்கிட ஏற்பாடு செய்யுமாறு தங்களை அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

**க.சுந்தர், எம்.எல்.ஏ.**

செயலாளர், காஞ்சிபுரம் தெற்கு மாவட்ட தி.மு.க.